# சேது பொறியியல் கல்லூரியில்


# முன்னாள் மாணவர் சங்கத்தினர் கூட்டம்



மதுரை சேது பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவ சங்க கூட்டமைப்பின் இணைய வழித்தலத்தை, கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகைதீன் துவக்கி வைத்தார். கல்லூரி இணை முதன்மை நிர்வாகி எஸ்.எம்.சீனி முகமது அலியார், நிர்வாக இயக்குனர் எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா உடன் உள்ளனர்.

**Dinakaran 14.01.2024**

# புரிந்துணர்வு ஒப்பந்தம்...



சேது பொறியியல் கல்லூரியுடன் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள பிரிட்டிஷ் அப்ளைடு காலேஜ் யுனிவர்சிட்டி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதற்கான சான்றிதழை, சேது பொறியியல் கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் எஸ்.முகமது ஜலீல், கல்லூரி முதன்மை நிர்வாக அலுவலர் எஸ்.எம்.சீனி மொஹிதீன், இணை முதன்மை நிர்வாக அலுவலர் எஸ்.எம்.சீனி முகமது அலியார் மற்றும் கல்லூரி ஆராய்ச்சி கழக இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா பெற்றுக் கொண்டனர்.

**Dinakanan 04.02.2024**



# சேது கல்லூரியில் கருத்தரங்கு

சேது பொறியியல் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் சென்னை பவன் சைபர் டெ
மென்பொருள் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு துறை தலைவர் பாலகுமார
மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் கல்லூரி முதல்வர் சிவக்குமார், துறை
தலைவி பார்வதி மற்றும் வேலைவாய்ப்பு துறை அதிகாரி ரமேஷ்.

**Dinakaran 27.02.2024**



# மாணவிகளுக்கு பரிசுக்கோப்பை

மதுரை, சேது பொறியியல் கல்லூரியில் முத்தமிழ் மன்றம் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் கழகம் சார்பாக கலை விழா நடைபெற்றது. இதற்கான போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சிறப்பு விருந்தினர் கோவை அவிநாசிலிங்கம் பல்கலைக்கழக பேராசிரியர் குரு ஞானாம்பிகை மற்றும் கல்லூரி நிர்வாக இயக்குனர் நிலாபர் பாத்திமா, கல்லூரி ஆராய்ச்சி இயக்குனர் நாசியா பாத்திமா ஆகியோர் பரிசுக்கோப்பை வழங்கினர்.

**Dinakaran 12.04.2024**

### பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு

# சேது பொறியியல் கல்லூரியில் ஊக்கத்தொகை தேர்வு



சேது பொறியியல் கல்லூரி நிர்வாகம் நடத்திய ஊக்கத்தொகை தேர்வினை கல்லூரி நிர்வாக அதிகாரி எஸ்.எம்.நிலோஃபர் பாத்திமா பார்வையிட்டார்.

**மதுரை, ஏப். 28:** மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரி நிர்வாகம் சார்பாக 12ம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு ஊக்கத்தொகை தேர்வு தேர்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கினார். கல்லூரி நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம். சீனி முகைதீன், எஸ்.எம். சீனி முகம்மது அலியார், எஸ்.எம்.நிலோஃபர் பாத்திமா, எஸ்.எம்.நாசியா பாத்திமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த ஊக்கத்தொகை தேர்வில் மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் இருந்து சுமார் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் எடுக்கப்படும் கட் ஆப் மார்க்கில் இருந்து 100, எழுதப்பட்ட ஊக்கத்தொகை தேர்வு 100 மார்க் இணைந்து தரவரிசைப்படி ரூ.2 லட்சம் முதல் ரூ.20 ஆயிரம் வரை பரிசு தொகை வழங்கப்பட உள்ளது. நிகழ்ச்சி ஏற்பாட்டை ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் துறை தலைவி ரத்தினமாலா, தகவல் தொடர்புத்துறை தலைவி புனிதா, கணிதப் பேராசிரியர் மக்கள் தொடர்பு துறை அதிகாரி முனைவர் லட்சுமண ராஜ், பேராசிரியர்கள் மீனாட்சி சுந்தரம், எஸ்தர், வேலைவாய்ப்பு கழக அதிகாரி ரமேஷ் குமார் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவர்கள் செய்திருந்தனர். நிகழ்வில் 600க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வினை பட்டிமன்ற நடுவர் சண்முக திருக்குமரன் தொகுத்து வழங்கினார்.

**Dinakaran 28.04.2024**



# மாநில அளவிலான செஸ் போட்டி

மதுரை,மே.2-

மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் மாநில அளவில் 17 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு செஸ் போட்டி தொடங்கியது. இந்த போட்டியை சேது பொறியியல் கல்லூரியும் சிவகாசி சதுரங்க கழகமும் இணைந்து நடத்தினர். போட்டியை கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் முகமது ஜலீல் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரிகள் சீனி முகைதீன், சீனி முகமது அலியார், நிலோப்பர் பாத்திமா, நாசியா பாத்திமா, முதல்வர் சிவக்குமார், தமிழக சதுரங்க போட்டி இணை செயலாளர் பிரகதீஷ், சிவகாசி சதுரங்க கழக செயலாளர் ஆனந்த ராமன், ஆர்பிட்டர் தினகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆண்கள் பிரிவில் 224 வீரர்களும், மகளிர் பிரிவில் 96 வீராங்கனைகளும் கலந்து கொண்டனர். இதில் 9 சுற்று நடைபெற்று ஆண்கள் பிரிவிலிருந்து 10 பேரும், பெண்கள் பிரிவில் 10 பேரும் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் ரூ.1 லட்சம் பரிசு தொகை வழங்கப்படுகிறது. மேலும் சிறப்பு பரிசுகளாக 11 வயதிற்கு கீழ் உள்ளவர்களுக்கும் 13 கீழ் உள்ளவர்களுக்கும் வழங்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாட்டை கல்லூரி மின்னணுவியல் மற்றும் தொடர்புத்துறை பேராசிரியர் மற்றும் சதுரங்கப் போட்டியின் ஒருங்கிணைப்பாளருமான ஷேக் தாவூத், சிறப்பு அதிகாரி துரைராஜ் தலைமையில் பேராசிரியர்கள் சாகுல் ஹமீத், நாகராஜ், சிவபாரதி, ஷேக் மைதீன், மலைச்சாமி மற்றும் மக்கள் மக்கள் தொடர்பு அதிகாரி லட்சுமணராஜ் செய்திருந்தனர்.

**Dinathanthi 02.05.2024**

# சதுரங்க வீரருக்கு பரிசு



காரியாபட்டி அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் நடந்த 17 வயதுக்கு உட்பட்ட சதுரங்க போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற நந்திஸ் என்ற வீரருக்கு கல்லூரி நிர்வாக இயக்குனர் நிலோபர் பாத்திமா நினைவு பரிசு வழங்கிய காட்சி. அருகில் சதுரங்க போட்டி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சேக் தாவூத், சிறப்பு அதிகாரி துரைராஜ், சிவகாசி சதுரங்க கழக செயலாளர் அனந்தராமன் ஆகியோர் உள்ளனர்.

**Dinathanthi 07.05.2024**




### சேது பொறியியல் கல்லூரியில்

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

மதுரை, மே.28–

மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சங்க கூட்டம் நடைபெற்றது. இதில் 1995–ம் ஆண்டு எந்திரவியல், கணினி கருவியல் மற்றும் கட்டுப்பாட்டு துறை மாணவர்கள் 25 ஆண்டுக்கு பின் சந்தித்தனர். கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் முகமது ஜலீல் தலைமை தாங்கினார். நிர்வாக அதிகாரி எஸ்.எம். சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ். எம். சீனி முகமது அலியார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி நிர்வாக இயக்குனர் எஸ். எம்.நிலோபர் பாத்திமா, கல்லூரி ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம். நாசியா பாத்திமா, முதல்வர் சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னாள் மாணவர் சங்க கூட்டமைப்பின் செயலாளர், கணினி துறை தலைவி பார்வதி வரவேற்றார். முடிவில், பொருளாளர் பேராசிரியர் தீபா நன்றி கூறினார். இதில், முன்னாள் மாணவ, மாணவிகள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு கல்லூரி கால அனுபவத்தை பகிர்ந்தனர். நிகழ்வில் கல்லூரி அகாடமிக் டீன் ஷாநவாஸ், தேர்வுத்துறை தலைவர் பேராசிரியர் முரளி கண்ணன், டீன் சிவரஞ்சனி, துறைத்தலைவர்கள், மக்கள் தொடர்பு அதிகாரி லட்சுமண ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை முன்னாள் சங்க மாணவ கூட்டமைப்பின் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

**Dinamalar 29.05.2024**



## How to get a govt. job

A seminar on 'Navigating the world of government jobs' was held at Sethu Institute of Technology, Kariapatti. College founder and chairman S. Mohammed Jaleel presided. Virudhunagar Collector V.P. Jeyaseelan, the chief guest, spoke to the students on preparation for various exams conducted for government jobs and emphasised the need to start preparing at least a year in advance. Earlier, Principal G.D. Sivakumar welcomed the gathering. Placement Officer S. Ramesh Kumar proposed the vote of thanks.

Seminar on 'Navigating the world of government jobs' in progress at Sethu Institute of Technology, Kariapatti

**THE HINDU 06.08.2024**




# சேது பொறியியல் கல்லூரி விளையாட்டு விழா

மதுரை,செப்.3-
மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் 30-வது ஆண்டு விளையாட்டு விழா நடந்தது. பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரி நிறுவனர் முகமது ஜலீல் தலைமை தாங்கினார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குனர் நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் நாசியா பாத்திமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வரவேற்றார். கல்லூரி உடற்பயிற்சி இயக்குனர் கணேஷ் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக இந்திய ரெயில்வே சர்வதேச கூடைப்பந்து வீராங்கனை தர்ஷினி மற்றும் ஸ்டாண்டர்ட் சார்ட்டட் பேங்க் துணைத் தலைவர் தேசிய கைப்பந்து வீரர் நாகேஸ்வரன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள். முன்னதாக தேசியக் கொடி, ஒலிம்பிக் கொடி, கல்லூரி கொடியை கல்லூரி தலைவர் முகமது ஜலில் ஏற்றினார். மாணவர்கள் அணிவகுப்புடன் ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டது. பல்வேறு வண்ணங்களில் அணிகள் பிரிக்கப்பட்டு மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்றனர். இதில் சிவப்பு அணி 50 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது. சிறந்த விளையாட்டு வீரராக இ.சி.இ. 3-ம் ஆண்டு மாணவர் நவீன், சிறந்த விளையாட்டு வீராங்கனையாக ஏ.ஐ.டி.எஸ். 2-ம் ஆண்டு மாணவி திவ்யபாரதி தேர்வுசெய்யப்பட்டனர். சிவப்பு நிற அணி சாம்பியன் பெற்று சுழற்கோப்பையை கைப்பற்றியது. முடிவில் வேளாண்மை பொறியியல் துறை தலைவர் முத்து சோலை ராஜன் நன்றி கூறினார்.

**Dinakaran 03.09.2024**




**Dinamani 03.09.2024**

## சேது பொறியியல் கல்லூரியில்

# 30வது ஆண்டு விளையாட்டு விழா




▶ சேது பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 30வது ஆண்டு விளையாட்டு விழாவில் சாம்பியன் பட்டம் பெற்ற அணிக்கு சுழற்கோப்பை வழங்கப்பட்டது.

மதுரை, செப்.3: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில், 30வது ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலீல் தலைமை தாங்கினார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம். சீனி முகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார் மரைக்காயர், நிர்வாக இயக்குனர் எஸ்.எம்.நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வரவேற்றார். கல்லூரி உடற்பயிற்சி இயக்குனர் சிவகணேஷ் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக இந்திய ரயில்வே சர்வதேச கூடைப்பந்து வீராங்கனை தர்ஷினி மற்றும் ஸ்டாண்டர்ட் சார்ட்டட் பேங்க் துணைத் தலைவர் தேசிய கைப்பந்து வீரர் நாகேஸ்வரன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினர். முன்னதாக தேசியக்கொடி, ஒலிம்பிக் கொடி, கல்லூரி கொடியை கல்லூரி தலைவர் முகமது ஜலீல் ஏற்றினார். மாணவர்கள் அணிவகுப்புடன் ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டது.

கல்லூரி மாணவ, மாணவிகள் சிகப்பு, ஊதா, பச்சை, மஞ்சள் என்ற அணிகளாக பிரிக்கப்பட்டு தொடர் ஓட்டம், நீளம் தாண்டுதல், கைப்பந்து, கூடைப்பந்து, எறிபந்து போட்டிகளில் பங்கேற்றனர். இதில் சிகப்பு அணி 50 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது. சிறந்த விளையாட்டு வீரராக இசிஇ மூன்றாம் ஆண்டு மாணவர் நவீன், சிறந்த விளையாட்டு வீராங்கனையாக ஏஐடிஎஸ் இரண்டாம் ஆண்டு மாணவி திவ்யபாரதி தேர்வு செய்யப்பட்டனர். முடிவில் வேளாண்மை பொறியியல் துறை தலைவர் முத்து சோலைராஜன் நன்றி கூறினார்.

**இந்து தமிழ் 04.09.2024**

### சேது பொறியியல் கல்லூரியில்

# அரசு வேலைவாய்ப்பு கருத்தரங்கு



▶ சேது பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற அரசு தேர்வுகளின் முக்கியத்துவம் பற்றிய கருத்தரங்கில் விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஜெயசீலனுக்கு கல்லூரி நிறுவனர் எஸ். முகமது ஜலீல் நினைவுப்பரிசு வழங்கினார். அருகில் கல்லூரி முதல்வர் சிவக்குமார், இணை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமது அலியார், டீன் ஷாநவாஸ் மற்றும் கல்லூரி தேர்வாணைய தலைவர் முரளி கண்ணன்.

**மதுரை, ஆக.1:** மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் செல் மற்றும் கல்லூரி வேலைவாய்ப்பு துறை சார்பாக மாணவர்கள் அரசு வேலைவாய்ப்பு பெறுவது பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது.

நிகழ்விற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலீல் தலைமை தாங்கினார். கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம். சீனிமுகைதீன், இணை முதன்மை நிர்வாக அதிகாரி எஸ்.எம்.சீனி முகமதுஅலியார், நிர்வாக இயக்குனர் எஸ்.எம்.நிலோஃபர் பாத்திமா, ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் கலந்து கொண்டு மாணவர்கள் அரசு வேலைகளுக்கு எவ்வாறு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பயிற்சி அளித்தார். கல்லூரி முதல்வர் ஜி.டி. சிவக்குமார் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி வேலை வாய்ப்புதுறை அதிகாரி ரமேஷ்குமார் நன்றி கூறினார். கல்லூரி தேர்வு ஆணைய தலைவர் முரளி கண்ணன், கல்லூரி வேலை வாய்ப்பு கழக பேராசிரியர்கள் மற்றும் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் செல் பேராசிரியர்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டை செய்திருந்தனர்.

**Dinakaran 04.09.2024**

## சேது பொறியியல் கல்லூரியில்

# முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா





▶ சேது பொறியியல் கல்லூரி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழாவில் ஊக்கத்தொகை தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் கல்லூரி நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம்.சீனி முகைதீன், எஸ்.எம்.சீனி முகமது அலியார், எஸ்.எம்.நிலோபர் பாத்திமா. எஸ்.எம். நாசியா பாத்திமா மற்றும் முதல்வர் சிவகுமார். அடுத்த படம்: விழாவில் கல்லூரி தலைவர் முகமது ஜலில் பேசுகிறார்.

மதுரை, செப். 5: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா நடைபெற்றது. நிகழ்விற்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கினார். நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம்.சீனி முஹைதீன், எஸ்.எம். சீனி முகமது அலியார், எஸ்.எம். நிலோஃபர் பாத்திமா, எஸ்.எம். நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர். முதல்வர் சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார். டீன் மோகனலட்சுமி வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்களாக தன்னம்பிக்கை பேச்சாளர் ராமகிருஷ்ணன், காட்டி குரூப்ஸ் முதன்மை மனித மேம்பாட்டுதுறை தலைவர் சஸ்வதி ரே மற்றும் ஐஸ்கொயர் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனர் ஜாபர் அலி கலந்து கொண்டனர். சேது பொறியியல் கல்லூரி நடத்திய 12ம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கான ஊக்கத்தொகை தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, ரூ.1 லட்சத்து 50 ஆயிரம், ரூ.1 லட்சத்து இருபதாயிரம் மற்றும் ரூ.50000 என மூன்று பரிசுகள் வழங்கப்பட்டது. இவற்றை 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் பெற்றனர்.

**Dinathanthi 05.09.2024**

# Graduands urged to adapt to challenges




A student receiving degree certificate at the Graduation Day at Sethu Institute of Technology at Kariapatti near Madurai on Thursday. G. MOORTHY

**The Hindu Bureau**
MADURAI

Chief Commissioner of Income Tax, Madurai, Sanjay Rai urged graduands to adapt to challenges and choose courage over comfort.

Speaking at the 24th Graduation Day of Sethu Institute of Technology (SIT) near Kariapatti on Thursday, Mr. Rai advised the graduands to make the best use of the experience they had gained at the college. They had a duty to make society better, he reminded them and urged the students to be caring and sharing.

Stalin Rajkumar of Tech Mahindra, the guest of honour, told the graduands to start unlearning. Though it might sound weird, one must go into the world and start unlearning, learn new things. and be flexible, he said.

SIT founder and chairman S. Mohamed Jaleel, Principal G.D. Sivakumar and Director of Administration S.M. Nilofer Fathima were present.

A total of 1,068 students - 1,000 from the undergraduate programmes and 68 from the postgraduate programmes - received degrees.

**THE HINDU 06.09.2024**

## சேது பொறியியல் கல்லூரியில்

# 25வது பட்டமளிப்பு விழா




▶ சேது பொறியியல் கல்லூரியில் நடந்த 25வது பட்டமளிப்பு விழாவில், தமிழக அரசின் ஸ்டார்ட் அப் சிஇஓ மற்றும் பணி இயக்குனர் சிவராஜா ராம்நாத் மாணவர்களுக்கு பட்டம் வழங்கினார். உடன் கல்லூரி நிறுவனர் எஸ்.முகமது ஜலில், கௌரவ அழைப்பாளர் பாலகுமார், முதல்வர் சிவக்குமார் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் உள்ளனர்.

மதுரை, செப். 7: மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில், 25வது பட்டமளிப்பு விழா நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் மற்றும் நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கினார். நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம்.சீனி முகைதீன், எஸ்.எம்.சீனிமுகமது அலியார், எஸ்.எம்.நிலோஃபர் பாத்திமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா வரவேற்றார். முதல்வர் சிவக்குமார் பட்டமளிப்பு ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக முதன்மை நிர்வாக அதிகாரி மற்றும் பணி இயக்குனர் ஸ்டாட் ஆப் சிவராஜா ராம்நாத் கலந்துகொண்டு பட்டமளிப்பு உரை நிகழ்த்தி மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். கௌரவ விருந்தினராக சென்னை பவான் சைபர் டெக்னாலஜி மென்பொருள் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டுத் துறை தலைவர் பாலகுமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இளநிலை பொறியியல் துறைகளில் இயந்திரவியல் துறை சார்பாக 245 மாணவர்களும், சிஎஸ்சி பிரிவில் 184, மின்னியல் மற்றும் மின்னணுவியல் பிரிவில் 119, மின்னியல் மற்றும் தகவல் தொடர்புத்துறையில் 177, தகவல் தொடர்புத்துறையில் 59, கட்டிடவியல் பிரிவில் 113, கெமிக்கல் பிரிவில் 44, அக்ரி பிரிவில் 62, பயோமெடிக்கல் பிரிவில் 60 என, 1063 மாணவர்கள் பட்டம் பெற்றனர். இவர்களுடன் முதுநிலை பொறியியல் பிரிவில் 63 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்.

சிறப்பு விருந்தினர் சிவராஜா ராம்நாத் பேசுகையில், தொழில் புரட்சியில் நாடு உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

ஐடி புரட்சியால் மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது என்றார். சிறப்பு அழைப்பாளர் பாலகுமார் பேசுகையில், மாணவர்கள் தங்கள் வாழ்க்கை பயணத்தை சரியாக அமைத்து வெற்றி பெற வேண்டும் என்றார்.

**Dinakaran 07.09.2024**




# சேது பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

மதுரை, செப்.7-

மதுரை அருகே உள்ள சேது பொறியியல் கல்லூரியில் 25-வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. கல்லூரி தலைவர், நிறுவனர் எஸ்.முகமது ஜலில் தலைமை தாங்கினார். நிர்வாக அதிகாரிகள் எஸ்.எம்.சீனி முகைதீன், எஸ்.எம்.சீனி முகமது அலியார், எஸ்.எம்.நிலோபர் பாத்திமா முன்னிலை வகித்தனர். கல்லூரி ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.எம்.நாசியா பாத்திமா வரவேற்றார். முதல்வர் சிவக்குமார் பட்டமளிப்பு ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினராக முதன்மை நிர்வாக அதிகாரி, பணிய இயக்குனர் ஸ்டாட் ஆப் சிவராஜா ராம்நாத் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். கவுரவ விருந்தினராக சென்னை பவான் சைபர் டெக்னாலஜி மென்பொருள் நிறுவன மனிதவள மேம்பாட்டுத்துறை தலைவர் பாலகுமார் கலந்துகொண்டார். விழாவில் மொத்தம் 1063 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

இதுபோல், முதுநிலை பொறியியல் பிரிவில் 63 மாணவ-மாணவிகள் பட்டம் பெற்றனர். முன்னதாக, சிறப்பு விருந்தினர் சிவராஜா பேசுகையில், இப்போது தொழில் புரட்சியில் நாடு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. மாணவர்கள் பட்டம் பெற்றுள்ள நிலையில் பொறுப்பு அதிகரித்துள்ளது. நல்ல தொழில்நுட்பம், நல்ல அறிவு வெளிப்படுத்துவதன் மூலம் வாழ்க்கையில் மிக சிறந்த இடத்தை அடையலாம். தாங்கள் கற்ற அறிவு மூலம் புதிய மாற்றத்தை கொண்டு வரவும், அதனை புது நிறுவனமாக மாற்றவும் பல வசதிகள் அரசால் செய்து தரப்பட்டு வருகிறது. இதனை பயன்படுத்தி புது மாற்றங்களை கொண்டு வர பட்டம் பெற்றவர்கள் முன்வர வேண்டும் என்றார். கவுரவ விருந்தினர் பாலகுமார் பேசுகையில், முதலில் பட்டம் பெற்றவர்கள் பெற்றோர்களுக்கும் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களுக்கு மற்றும் சமுதாயத்திற்கு நன்றி உள்ளவராக இருக்க வேண்டும். தங்களது வாழ்க்கை பயணத்தை சரியாக அமைத்து வெற்றி பெற வேண்டும் என்றார்.

**Dinathanthi 07.09.2024**



■ மதுரை சேது பொறியியல் கல்லூரி விழாவில் நிறுவனர் முகமது ஜலீல், உலக அளவில் சிறந்த ஆராய்ச்சியாளராக தேர்வு செய்யப்பட்ட பேராசிரியர் ஜெபக்குமார் எடிசனை பாராட்டி பரிசு வழங்கினார். இடமிருந்து டீன் மோகன லட்சுமி, முதல்வர் சிவக்குமார், தேர்வு துறை தலைவர் முரளி கண்ணன், டீன் ஷாநவாஸ்.

# சேது பொறியியல் கல்லூரியில் ஆராய்ச்சியாளர்களுக்கு பாராட்டு

**மதுரை, அக். 4 –**
மதுரை அருகே சேது பொறியியல் கல்லூரியில் ஆராய்ச்சிக் கழகம் சார்பில் ஆராய்ச்சிகளில் சிறப்பாக செயல்பட்ட பேராசிரியர்கள், மாணவர்களை கவுரவப்படுத்தும் நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி நிறுவனர் முகமது ஜலீல் தலைமை வகித்தார். நிர்வாகிகள் சீனி முகைதீன், சீனி முகமது அலியார், நிலோபர் பாத்திமா, ஆராய்ச்சிக் கழக இயக்குநர் நாசியா பாத்திமா முன்னிலை வகித்தனர்.

அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலை, அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் எல்.சி.வியர் இணைந்து உலகின் தலைசிறந்த 2 சதவீத விஞ்ஞானிகள் பட்டியலை வெளியிட்டது.

அதில் சேது பொறியியல் கல்லூரியின் வேதியியல் துறை பேராசிரியர் ஜெபக்குமார் இமானுவேல் எடிசன் இடம் பெற்றார். மொத்தம் 2 லட்சத்து 23 ஆயிரத்து 153 பேர் அடங்கிய தரவரிசை பட்டியலில், 45 ஆயிரத்து 220 வது இடம் பெற்றார்.

இதுவரை 125 அறிவியல் ஆராய்ச்சி கட்டுரைகளை உள்நாடு, வெளிநாடு ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். இவரது கட்டுரைகள் உலகளவில் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஆராய்ச்சியாளர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

இச்சாதனையை கல்லூரி நிர்வாகிகள் பாராட்டி கவுரவித்தனர். ஆராய்ச்சியில் சிறந்து விளங்கிய மின்னியல் தகவல் தொடர்புத்துறை தலைவி பாரிசா பேகம், பேராசிரியர் தமிழ்ச்செல்வி, எம்.பி.டி.எல்., தேர்வில் தங்கம் வென்ற 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

டீன் மோகன லட்சுமி, முதல்வர் சிவக்குமார், தேர்வு துறைத் தலைவர் முரளி கண்ணன், டீன் ஷாநவாஸ் பங்கேற்றனர்.

**Dinamani 04.10.2024**